*Kalanjiyam International Journal of Tamil Studies* ISSN: 2456-5148 (Online)
*An international, peer-reviewed quarterly academic research journal* www.ngmtamil.in

களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Quarterly Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor 4.355 Multidisciplinary International
: https://doi.org/10.63300/kijts10sp02.2026

**Vol. 10 No. 02, September 2026 (Special Issue) p44-53** | Available online at: www.ngmtamil.in
*Original Research, Paper – Peer Reviewed*

# சங்க இலக்கியங்கள் வழி அறியலாகும் பண்டைய மக்களின் பழக்கவழக்கங்கள்

## Customs and practices of ancient people as revealed through Sangam literature.

**முனைவர் ப. கற்பகராமன்,**
உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை, சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம் -05
அலைபேசி எண்: 9894210651
மின்னஞ்சல் முகவரி: sonakarpagaraman@gmail.com,
ORCID ID: https://orcid.org/0000-0003-1625-7209

**Abstract**

Since ancient times, the practice of naming individuals has been driven by the desire for one's lineage to endure within society. Specifically, bestowing the names of ancestors fosters the belief that they continue to live among us, transcending their physical existence. Sangam literature reveals that the custom of naming a child after the father originated from this very sentiment. This research paper examines various customs and practices—such as lighting lamps at dusk, the Madal-eru-thal ritual, Brahmins wearing the kudumi (tuft of hair), the beating of drums parai, and specific marriage, worship, and festival traditions—as they are depicted in Sangam literature.

**ஆய்வுச் சுருக்கம்**

தொன்றுதொட்டு தன்னுடைய வம்சம் அப்பெயரின் மூலமாக சமூகத்தில் நிலைத்து நிற்கவேண்டும் என்ற எண்ணத்தில்தான் ஒவ்வொருவருக்கும் பெயர் வைக்கப்படுகின்றது. அதிலும் முன்னோர்கள் பெயரை வைப்பதன் மூலம் அவர்களுடைய பூத உடல்களையும் தாண்டி அவர்கள் நம்மோடு வாழ்வார்கள் என்கிற எண்ணம் தோன்றும். இதன் அடிப்படையிலேயே தந்தையின் பெயரை பிள்ளைக்கு வைக்கும் வழக்கம் பண்டைய காலத்தில் இருந்துள்ளது என்பது சங்க இலக்கியங்கள் மூலம் நமக்குத் தெரிகின்றது. இதன் அடிப்படையிலேயே மாலைப் பொழுதில் விளக்கேற்றுதல், மடலேறுதல், பார்ப்பணர் குடுமி வைத்திருந்தல் பறையறைதல், திருமண முறைகள், வழிபாட்டு முறைகள், திருவிழாக்கள் போன்ற பழக்கவழக்கங்கள் சங்க இலக்கியங்கள் மூலம் வெளிப்படுவதை ஆராய்வதாக இந்த ஆய்வுக்கட்டுரை அமைகின்றது.

© 2014 The Author(s). This open access article is distributed under a Creative Commons Attribution (CC-BY) license

*Kalanjiyam International Journal of Tamil Studies*, Vol. 10 No. 02, September 2026,
https://doi.org/10.63300/kijts10sp02.2026.07

**குறிப்புச் சொற்கள்:**

மடலேறுதல் - பார்ப்பனக் குறுமகப்போல – பறை - தைந்நீராடல் - தைந்நீராடல் - கைம்மை - பூண்தொடை விழா - உள்ளி விழா.

**ஆய்வு அனுகுமுறை**

பண்டைய கால மக்களின் அன்றாட பழக்கவழக்கங்கள் சார்ந்த வாழ்வியல் செய்திகளை சங்க இலக்கியங்கள் வழி எடுத்துரைப்பதால் இந்த ஆய்வுக்கட்டுரை எடுத்துக்கூறும் முறை அய்வாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வு நோக்கம்**

பண்டைய கால மக்களின் வாழ்வியல் சார்ந்த பழக்கவழக்கங்கள், வதிருமண முறைகள், பல்வேறு வகையான வழிபாட்டு முறைகள், உடல் மற்றும் மனதை செம்மையாக்கும் திருவிழாக்கள் போன்றவற்றைச் சங்க இலக்கியங்கள் வழி ஆராய்ந்து வெளிப்படுத்துவதே இந்த ஆய்வின் நோக்கமாகும்.

**முன்னுரை**

படைப்பு என்பது கற்பனை கலந்ததாக மட்டும் நின்றுவிடாமல் நிகழ்கால உண்மைகளையும் பதிந்ததாக அமைய வேண்டும். படைப்பாளி என்பவன் தான் வாழும் சமுதாயம் மீது மிகுந்த பற்றகொண்டவனாக இருந்தால் மட்டுமே அவனால் அந்த சமுதாயம் பலன் பெறும். சங்க இலக்கியங்களை இயற்றிய ஆசிரியர்கள் அனைவருமே தங்கள் சமுதாயம் மீது மிகுந்த பற்று கொண்டவர்களாகவே விளங்கியுள்ளனர் என்பதை அவர்களுடைய படைப்புகளே எடுததுக்காட்டுகின்றன. பழக்கம் என்பது நாம் பழகிக் கொள்வதாகும். வழக்கம் என்பது நம் முன்னோர் பழகிய பழக்கம் நமக்கு வழக்கமாக வருவதாகும். எனவே நம் முன்னோர் பழக்கம் நமக்கு வழக்கமாகும். நம் பழக்கம் நம் பின்னோர்க்கு வழக்கமாகும். இப்பழக்க வழக்கங்கள் மூலம் சங்ககால மக்களின் வாழ்க்கை முறையை அறியலாம்.

**சங்ககால மக்களின் பழக்க வழக்கங்கள்**

மக்களின் தேவைகளின் அடிப்படையில் பழக்கங்கள் தோன்றுகின்றன. அவை சமுதாயத்தால் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற நிலையில் வழக்கங்களாக உருப்பெறுகின்றன. சங்ககால மக்கள் கடைபிடித்த பழக்கவழக்கங்களாக, தந்தை பெயரை பிள்ளைகளுக்கு வைத்தல், கடன் கொடுத்தல் வாங்கல், மாலைப்பொழுதில் விளக்கேற்றல், மடலேறல், கள்ளுண்ணல், பார்ப்பனர் குடுமி வைத்திருத்தல், பறையறைதல், தை நோன்பு, நடுகல் வழிபாடு போன்றவற்றைக் கூறலாம். இப்பழக்க வழக்கங்கள் பற்றி அகப்பாடல்கள் சான்று பகர்கின்றன.

**தந்தை பெயரைப் பிள்ளைக்கு வைத்தல்**

பழங்கால மக்களிடம் தந்தை பெயரை மகனுக்கு வைக்கும் மரபு காணப்பட்டது. மலைவாழ் மக்களிடம் இன்றும் தந்தையின் பெயரை மகனுக்கு வைக்கும் முறை பின்பற்றப்படுகிறது. தலைவன் பரத்தையர் வீட்டில் தங்கியதால் தலைவி வருத்தத்துடன் இருக்கிறாள். தந்தையின் பெருமை மிக்க பெயரை முறையாகச் சூட்டியுள்ள தன் மகனை அணைத்துக் கொண்டு பொய்யாக துயில் கொள்வதை,

**“முதல்வன் பெரும்பெயர் முறையுளிப் பெற்ற**

**புதல்வற் புல்லிப் பொய்த் துயில் துஞ்சும்”**

**(கலித்தொகை மருதக்கலி - பா- 75)**

என்னும் கலித்தொகைப் பாடல் வரிகள் உணர்த்துகின்றன. சங்ககால நடைமுறை காலப்போக்கில் மாறி தங்களுக்கு விருப்பமான பெயரை நாகரிகம் என்ற பெயரில் வைத்து வருகின்றனர்.

**மாலைப் பொழுதில் விளக்கேற்றல்**

இரவுப்பொழுதுக்குத் தேவையான வெளிச்சத்திற்கும், வீடு மங்களகரமாக இருப்பதற்குமாக மாலை நேரத்தில் மகளிர் விளக்கேற்றும் பழக்கம் சங்க காலத்தில் இருந்தது. அன்றைய மக்களின் பழக்கமே இன்றும் நடைமுறையில் இருந்து வருவதைக் காணமுடிகிறது. மகளிர் செந்தீயால் மாலைப் பொழுதில் விளக்கேற்றியதை,

**“செந்தீச் செவ்வழல் தொடங்க வந்ததை**

**வால்இழை மகளிர் உயிர் பொதி அவிழ்க்கும்”**

**(கலித்தொகை நெய்தல்கலி - பா- 118)**

எனும் கலித்தொகைப் பாடலடிகளால் அறியலாம்.

**மடலேறுதல்**

தலைவன் தான் விரும்பிய தலைவி தனக்குக் கிடைக்காத நிலையில் எருக்கம் பூ மாலை சூடி, பனை மடலால் ஆன குதிரையின் மீது ஏறி தலைவியின் வடிவம் தீட்டியகொடியை ஏந்தி மடலேறுவான். பெண்கள் எந்த நிலையிலும் மடலேறுதல் செய்வதில்லை. மடலேறுதல் குறித்த செய்திகள் அகப்பாடலில் காணப்படுகின்றன.

பனங்கருக்கால் செய்த குதிரையின் மீது அமர்ந்து தலைவியின் உருவத்தைப் படமாக வரைந்து கையிலே பிடித்துக் கொண்டு பல பேர் அறிய ஊர் நடுவே நாற்சந்தியில் மயிற்பீலி, பூளைப்பூ, ஆவிரம்பூ, எருக்கம்பூ ஆகியவற்றைக் கொண்டு மாலையாகக் கட்டப்பட்டதை கழுத்தில் அணிந்து தலைவன் மடலேற நிற்பதை,

**“மணிப்பீலி சூட்டிய நூலோடு மற்றை**

**அணிப்பூளை, ஆவிரை, எருக்கொடு பிணித்து யாத்து**

**மல்லல் ஊர் மறுகின்றகண் இவட்பாடும்”**

**(கலித்தொகை நெய்தல்கலி - பா- 138)**

என்னும் கலித்தொகைப் பாடல் சுட்டுகின்றது. தலைவன் தான் விரும்பிய தலைவியை அடைய முடியாத நிலையில் மடலேறுவேன் என்று கூறுதலும் அதன் பிறகு திருமணம் நிகழ்ந்ததும் சங்ககாலத்தில் இருந்த மரபு என்பது புலனாகிறது. மடலேறுதல் வழி தாம் விரும்பிய பெண்ணை மணந்து கொள்ளும் வழக்கம் அக்காலத்தில் இருந்தது தெளிவாகிறது.

**பார்ப்பனர் குடுமி வைத்திருத்தல்**

பண்டைய காலத்தில் பார்ப்பனர்கள் குடுமி வைத்திருப்பார்கள். தங்கள் வீட்டுச் சிறுவர்கள் குடுமி வைத்திருந்தனர் என்பதை,

**"அன்னாய் வாழி வேண் டன்னை நம்மூர்ப்**
**பார்ப்பனக் குறுமகப்போலத் தாமும்**
**குடுமித் தலைய மன்ற**
**நெடுமலை நாடன் ஊர்ந்த மாவே"**

**(ஐங்குறுநூறு -குறிஞ்சிக்கலி -202)**

என்னும் ஐங்குறுநூற்றுப் பாடல் வரிகள் எடுத்துரைக்கின்றன. இன்றும் பார்ப்பனர்கள் குடுமி வைத்திருப்பதைப் பார்க்கின்றோம்.

**பறையறைதல்**

பழங்காலத்தில் மக்களுக்கு ஒரு செய்தியைத் தெரிவிக்க பறையறைந்து சொல்லும் வழக்கம் இருந்தது. மதங்கொண்ட யானை நீராட்டுதற்கு வெளியே கொண்டுவரும் பொழுது பறையறைந்து மக்களை வெளியே வரவேண்டாம் என்று எச்சரிக்கும் வழக்கம் இருந்ததை பின்வரும் கலித்தொகைப் பாடல் வழி புலனாகின்றது.

**"நிறை அழிகொல் யானை நீர்க்கு விட்டாங்கு**
**பறை அறைந்தல்லது செல்லற்க என்னா**
**இறையே தவறு உடையான்"**

**(கலித்தொகை நெய்தல்கலி - பா- 141)**

கிராமப்புறங்களில் பொதுமக்களுக்கு செய்தியை அறிவிக்க பறை பயன்படுத்துவது நடைமுறை வழக்கத்தில் உள்ளது. அது மட்டுமன்று காவிரியாற்றுப் படுக்கையில் நீர்ப்பெருக்கு ஏற்படும் போது மக்களுக்கு எச்சரிக்கை செய்வதற்காக மாவட்ட நிர்வாகம் பறை அடித்து செய்தியை அறிவிக்கின்ற வழக்கம் இன்றும் வழக்கத்தில் உள்ளது.

**தைந்நீராடல் (அ) தை நோன்பு**

தை மாதத்தில் நீராடுதல் தைந்நீராடல் எனப்படும். மணமாகாத பெண்கள் மார்கழி முழுமதி நாள் தொடங்கித் தை முழுமதி நாள் வரை விடியற்காலையில் நீராடி நோன்பிருப்பர். இளம் பெண்களால் நிகழ்த்தப்பெறும் தைந்நீராடல் சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன. திருப்பாவை,

திருவெம்பாவை பக்தி இலக்கியங்கள் தோன்றுவதற்கும் தைந்நீராடல் அடிப்படையாய் அமைந்தது எனலாம். தைந்நீராடல் பற்றி "பெண்கள் மார்கழியில் நோன்பிருந்து தைமாதம் முதலில் நீராடுவர். இதற்குத்தான் தைந்நீராடல் என்று பெயர்" என்று சாமி.சிதம்பரனார் அவர்கள் 'பழந்தமிழர் வாழ்வும் வளர்ச்சியும்' என்ற நூலில் குறிப்பிடுகிறார். நல்ல கணவன் கிடைக்கவேண்டும் என்பதற்காக இளம்பெண்கள் தைமாதத்தில் விடியற்காலையில் நீராடி நோன்பு இருந்துள்ளனர். இப்பழக்கம் சங்ககாலப் பெண்களின் வழக்கமாக இருந்துள்ளது.

தைத்திங்களில் நீராடி நோன்பு மேற்கொண்டதன் பயனாக என்னைப் பெற்றாள் என்று தலைவன் கூறியதை,

**"தைத்திங்கள் தன்கயம் படியும்**

**பெருந்தோட் குறுமகள்"**

**(நற்றிணை – பா- 80)**

என்ற பூதன்தேவனாரின் நற்றிணைப் பாடல் வரிகள் விளக்குகின்றன. இன்றும் திருமணமாகாத பெண்கள் மார்கழி மாதத்தில் பாவை நோன்பிருக்கும் வழக்கத்தைக் காணமுடிகிறது.

**நடுகல் வழிபாடு**

இறந்தவர்களின் நினைவாக எடுக்கப்படும் நினைவுக் கல் நடுகல் ஆகும். போரில் விழுப்புண்பட்டு இறக்கும் வீரனுக்காக அவனைப் போற்றும் வகையிலும் தியாகத்தை வெளிப்படுத்தும் வகையிலும் கல் ஒன்றினை நட்டு அதனை வழிபடும் வழக்கம் சங்க காலத்தில் இருந்தன. இதைப் பற்றி அகநானூற்றில் நோய்பாடியார் வெட்சி வீரர்கள் கொண்டு சென்ற ஆநிரைகளை மீட்க நடத்திய போரில் கரந்தை வீரர்கள் இறந்தனர். அவர்களுக்கு நடுகல் நட்டதை,

**"பெயரும் பீடும் எழுதி அதர்தொறும்**

**பீலிசூட்டிய பிறங்குநிலை நடுகல்**

**வேல்ஊன்று பலகை வேற்றுமுனை கடுக்கும்"**

**(அகநானூறு – பா -67)**

என்னும் அகநானூற்றுப்பாடல் வழி அறியமுடிகிறது. இன்றும் இராணுவத்தில் பணியாற்றும் வீரர்கள் போரில் வீரமரணம் அடைந்தால் அவர்களுக்கு அரசு மரியாதை செய்து துப்பாக்கிக் குண்டுகள் முழங்க அவர்களின் இறுதிச்சடங்கு நடைபெறுகிறது.

**திருமணமுறை**

ஓர் ஆணும் பெண்ணும் இணைந்து இல்லறம் மேற்கொள்ள நடத்தப்பெறும் வாழ்க்கை ஒப்பந்தம் மணம் எனப்படும். இல்லற வாழ்க்கைக்கு அடிப்படையாய் அமைவது திருமணம் என்று கூறமுடிகிறது. சங்ககாலத் தமிழரின் வாழ்க்கை நெறியை களவு, கற்பு என்று இரு வகையாகக்

கூறலாம். ஊரறியாத வகையில் வயது வந்த ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழ்வது களவு என்றும் ஊரறியத் திருமணம் செய்து கொண்டு வாழ்வது கற்பு என்றும் கூறலாம். தொல்காப்பியர்,

**"கற்பெனப் படுவது கரணமொடு புணரக்**

**கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்**

**கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே"**

**(தொல்காப்பியம் - பொருளதிகாரம் - கற்பியல் - 01)**

என்ற நூற்பாவில் திருமணத்தைக் கற்பு என்ற சொல்லால் சுட்டுகிறார்.

சங்ககாலத்தில் காதல் திருமணமும் பெற்றோரால் நடத்தப்படும் திருமணமும் இருந்திருக்கின்றன. தலைவன் தலைவி காதலான களவு வாழ்க்கையில் ஊரால் அலர் ஏற்படும். இதையறிந்த தலைவியின் பெற்றோர் (இற்செறிப்பர்) இல்லின் கண் கட்டுப்பாட்டோடு அடைத்து வைப்பர். களவொழுக்கம் காரணமாக பெற்றோரின்; தடையால் உடன்போக்கு நிகழ்தலும் உண்டு. தலைவன் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்று திருமணம் செய்வது மரபு. சில நேரங்களில் தோழி இடையிட்டு அறத்தோடு நின்று திருமணத்தை நடத்தி வைத்தலும் உண்டு. தலைமக்களின் வாழ்வை அறவழியில் நிலைப்படுத்த தோழி, தலைவனும் தலைவியும் பிறர் அறியாமல் காதல் கொண்ட உண்மையை எடுத்துரைப்பதை,

**"எந்தையும் யாவும் உணரக் காட்டி**

**ஒளித்த செய்த வெளிப்படக் கிளந்த பின்**

**மலைகெழு வெற்பன் தலைவந் திரப்ப**

**நன்று பரி கொள்கையின் ஒன்றா கின்றே"**

**(குறுந்தொகை – பா- 374)**

என்னும் குறுந்தொகைப் பாடல் வரிகள் விளக்குகின்றன. களவு மணம் கற்பாக மாறுவதற்கு தோழியின் பங்கு இன்றியமையாததாக இருந்தது.

**புதுமணல் பரப்புதல்**

புதுமணல் பூசி வீட்டை அழகுபடுத்தி திருமண காலத்தில் மகிழ்ச்சியோடு இருந்தனர். புதுமணல் பரப்பி வீட்டை அழகுபடுத்தும் முறை வழக்கமாகப் பின்பற்றப்படும் முறை எனலாம். புதுமணல் பரப்பி எருமையின் கொம்பை வீட்டினுள் நட்டு அதனைத் தெய்வமாக வழிபட்டதை,

**"தருமணல் தாழப்பெய்து இல்பூவல் ஊட்டி**

**எருமைப் பெடையோடு எமர்ஈங்கு அயரும்**

**பெருமணம் எல்லாம் தனித்தே ஒழியே"**

**(கலித்தொகை - முல்லைக்கலி- பா 144)**

என்ற பாடல் வழி அறிந்துகொள்ள முடிகிறது.

**தீ வலம் வருதல்**

திருமணத்தின் போது தீ வலம் வருதல் அந்தணர்களிடம் காணப்பட்டது. மணமக்கள் இருவரும் கையினைப் பிடித்துக் கொண்டு தீயினைச் சுற்றி வலம் வருதல் கலித்தொகையில் ஒரு பாடலில் மட்டும் இடம்பெற்றுள்ளது. இதனை,

**"காதல் கொள் வதுவைநாள் கலிங்கத்துள் ஒடுங்கிய**

**மாதர் கொள் மான் நோக்கின் மடந்தைதன் துணை**

**ஓதுடை அந்தணன் எரிவலம் செய்வான் போல்"**

**(கலித்தொகை - மருதக்கலி- பா 04)**

என்னும் கலித்தொகைப் பாடல் வாயிலாக அறியலாம். மணமக்களுக்கு மங்கல நீராட்டியும் வீட்டிற்கு புதுமணல் பரப்பியும் அலங்காரம் செய்தும் திருமணம் நடத்தியதும் தாலி என்ற ஒன்று சங்க காலத்தில் இல்லை என்பதும் புலனாகிறது.

**சடங்குகள்**

பிறப்பு முதல் இறப்பு வரை மக்களின் வாழ்க்கைக்கேற்பவும் தரத்திற்கேற்பவும் சடங்குகள் இடம்பெறுகின்றன. வளமைக்காக, வாழ்வியலில் சிலம்புகழி நோன்பு, வெறியாட்டு, ஈமச்சடங்கு, கைம்மைநோன்பு போன்ற சடங்கினை சங்ககால மக்கள் தங்கள் வாழ்க்கையில் மேற்கொண்டு;ள்ளனர்.

**மழை வேண்டல்**

மழை பெய்யாமல் போனால் பயிர்கள் இல்லாமல் போகும். உணவின்றி மக்கள் வாடுவர் ஆகையால் மழையைப் பெய்விக்க குறவர்கள் ஆரவார ஒலி எழுப்பி மழையை வேண்டி மந்திரச் சடங்கை செய்தனர். இதனை,

**"குன்றக் குறவன் ஆர்ப்பின் எழிலி**

**நுண்பல் அழிதுளி பொழியும் நாட"**

**(ஐங்குறுநூறு – பா – 251)**

என்ற ஐங்குறுநூற்றுப் பாடல்வரிகளில் அறியமுடிகிறது.

**சங்ககால மக்களின் வழிபாடு**

வழிபடு என்னும் சொல்லிலிருந்து பிறந்தது. வழிபாடு என்பதற்கு வணங்குதல், பின்பற்றுதல், நெறிப்படுத்துதல், என்று பொருள் கூறலாம். தெய்வங்களை மகிழ்விப்பதற்காக வழிபாடுகள் செய்யப்படுகின்றன. மர வழிபாடானது சங்ககாலத்தில் பெருமளவு இருந்துள்ளதை சங்கப்பாடல்கள் தெரிவிக்கின்றன. ஆலமரம், கடம்பமரம், வேங்கை மரம் போன்ற மரங்களை வழிபட்டுள்ளனர்.

**ஆலமர வழிபாடு**

ஆலமரம் மிகப் பரந்து தழைத்திருந்தது. இம்மரத்தின் கீழ் சிவபெருமான் தவம் புரிந்ததாகக் கூறினர். இதனை கலித்தொகை

**“ஆலமர்ச் செல்வன்” (கலித்தொகை - மருதக்கலி- பா -45)**

என்னும் வரிகளில் சுட்டுகிறது.

**கடம்பமரம்**

கடம்பமரத்தில் முருகன் இருப்பதாக நம்பி அதை வழிபட்டனர். முருகனே கடம்பன் என்று அழைக்கப்பட்டான். கடம்ப மரக் கடவுள் வழிபட்டால் கொடியோர்களை விரட்டும் என்ற நம்பிக்கை இருந்தது. இம்மரம் மன்றத்தில் இருந்ததை,

**“மன்ற மராஅத்த பேஎமுதிர் கடவுள்**
**கொடியோர்த் தெறூஉம் என்ப”**

**(குறுந்தொகை – பா-87)**

எனும் குறுந்தொகைப் பாடல் வரிகளில் கபிலர் கூறுகிறார்.

**வேங்கை மரம்**

வேங்கை மரம் வயல்களை ஒட்டி வளர்ந்திருக்கும. வேங்கை மரக்கடவுள் கண்ணகி. இம்மரத்தை வணங்கினால் வயல் சிறப்பாக விளையும் என்ற கருத்தினை,

**“எரிமருள் வேங்கைக் கடவுள் காக்கும்**
**குருகார் கழனி”**

**(நற்றிணை - பா– 216)**

எனும் நற்றிணைப் பாடல் வரி மூலம் அறியமுடிகிறது.

**திருவிழாக்கள்**

மக்களால் விரும்பி நடத்தப்படும் விழாக்கள் மகிழ்ச்சியும் கொண்டாட்டமும் பொழுதுபோக்கும் நிறைந்தது. விழா என்பதற்கு, “திருவிழா, மங்கலச் சடங்கு, விழவு” என்று மதுரைத் தமிழ்ப் பேரகராதி பொருள் தருகிறது. திருவிழா கொண்டாடுதல் பண்டையத் தமிழ் மக்களின் மரபாக இருந்துள்ளன.

**கார்த்திகைத் திருவிழா**

சங்ககால மக்கள் கொண்டாடிய விழாக்களில் ஒன்று. இது கார்த்திகை மாதத்தில் கொண்டாடும் விழா. தெருக்களில் தம் வீட்டுவாசலில் விளக்குகளை ஏற்றி மாலைகளைத் தொங்கவிட்டதை நக்கீரர் அகநானூற்றில்,

**“அறுமீன் சேறும் அகல் இருள் நடுநாள்**
**மறுகுவிளக்கு உறுத்து மாலை தூக்கி”**

**(அகநானூறு – பா-141)**

என்னும் பாடலில் பதிவு செய்துள்ளார். தீபநாளில் விளக்கேற்றி வழிபட்டால் வாழ்வில் அனைத்து செல்வங்களையும் பெறலாம் என்ற நம்பிக்கையில் கொண்டாடப்பட்டது. இன்றும் கார்த்திகை தீபம் அன்று விளக்கேற்றி வழிபடுவது தொன்று தொட்டு வரும் வழக்கம் எனலாம்.

**பொங்கல் விழா**

தை மாதத்தில் கொண்டாடப்படும் விழா. அறுவடை விழாவாகத் தொடங்கிப் பின்னர் வளமையைக் குறிக்கும் விழாவாக மாறியது. பொங்கல் விழா பற்றியக் குறிப்பு கிடைக்கவில்லை. தைத்திங்களின் போது நீராடி நோன்பு இருந்து உண்ணுதலை நற்றிணை,

**"…….. ……… நோன்பியர்**

**கைஊண் இருக்கையின் தோன்றும் நாடன்"**

**(நற்றிணை – பா-22)**

என்ற பாடல் வரிகளில் கூறப்பட்டுள்ளன. இன்று பொங்கல் விழா தென்னிந்தியா முழுவதும் கொண்டாடப்படும் விழாவாக இருக்கிறது.

**பூண்தொடை விழா**

பகைவரை வென்ற மழவர்கள் எடுக்கும் விழா பூண்தொடை விழாவாகும். இதனை அகநானூற்றில் மாமூலனார்,

**"வார்கழல் பொலிந்த வன்கண் மழவர்**

**பூந்தொடை விழவின் தலைநாள் அன்ன**

**தருமணல் ஞெமிரிய திருநகர் முற்றம்"**

**(அகநானூறு-பா – 187)**

என்னும் பாடல் வரிகளில் தெளிவுபடுத்துகிறார். வீரர்களின் திறமையைக் கொண்டாடும் வகையில் இவ்விழா அமைந்துள்ளது.

**காமன் விழா**

மாயோனின் மகனாகக் கருதப்படும் காமனுக்கு இளவேனில் காலத்தில் எடுக்கும் விழாவாகும். தலைவன் பொருளீட்டுவதற்கு தலைவியைப் பிரிந்து சென்றதால் அவள் வருந்துகின்றாள். அவளை ஆற்றுப்படுத்தும் தோழி நம் காதலர் வருவார் காமவேலுக்கு விழா எடுக்கும் காலம் வந்துவிட்டது என்று கூறுவதை,

**"காமவேள் விழவாயின் கலங்குவள் பெரிது என**

**ஏமுறு கருந்திண் தேர் கடவி"**

என்ற பாடல் வரிகள் வழி அறியலாம்.

**பங்குனி விழா**

*Kalanjiyam International Journal of Tamil Studies*, Vol. 10 No. 02, September 2026,
https://doi.org/10.63300/kijts10sp02.2026.07

முருகனுக்காக பங்குனி மாதத்தில் நடைபெறும் விழா பங்குனி விழாவாகும். உறையூரில் பங்குனி உத்திர நாளில் இவ்விழா நடைபெறும் இவ்விழா பற்றி,

**"உருவவெண் மணல்முருகு நாறு தண்பொழில்**

**பங்குனி முயக்கம் கழிந்த வழிநாள்"**

**(அகநானூறு -பா– 137)**

என்னும் அகநானூற்றுப் பாடல் வரிகளில் முதுகூத்தனார் சுட்டுகிறார். இன்றும் முருகன் கோவில்களில் பங்குனி உத்திர விழா சிறப்பாக நடைபெறுவதைக் காணமுடிகிறது.

**முடிவுரை**

பெயர் வைப்பதில் தொடங்கி, மாலையில் இமறை நம்பிக்மகைக்காக விளக்கேற்றுதல் என்று சங்ககால மக்கள் மிகவும் செம்மையாக தங்கள் வாழ்க்கையை வாழ்ந்தனர். பார்ப்பணர் முதல் பறையர் வரை தங்களுக்குத் தெரிந்த நற்செயல்களை சமூகத்தில் பரவ விட்டனர். விரதம் இருத்தல், நடுகல் போன்றவற்றை வழிபடல் என்று தங்களுடைய வழிபாட்டுமுறைகளில் மிகச் சிறந்தவர்களாகக் காணப்பட்டனர். திருமணத்திற்கு முன்பும் பின்பும் பல்வேறு மங்கல நிகழ்வுகளை நிகழ்த்தி மகிழ்ந்தனர் என்ற இத்தகைய வாழ்வியல் செய்திகள் அனைத்தையும் வெளிப்படுத்தும் காலக் கண்ணாடியாக சங்க இலக்கியங்கள் திகழ்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

**ஆய்வுக்குத் துணை நின்ற நூல்கள்**

[1.] தொல்காப்பியம் – பொருளதிகாரம்- இளம்பூரணர் (உரையாசிரியர்) - சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை - பதிப்பு ஆண்டு – 1956

[2.] அகநானூறு – புலியூர்க்கேசிகன் (உரையாசிரியர்) - பாரி நிலையம், 90, பிராட்வே, சென்னை – 600 108 - பதிப்பு ஆண்டு-1960

[3.] நற்றிணை - திருமாளிகைச் சௌரிப் பெருமாள் அரங்கன் (உரையாசிரியர்) - முல்லை நிலையம், பாரதி நகர், சென்னை - பதிப்பு ஆண்டு - 2000

[4.] க லித்தொகை - புலியூர்க்கேசிகன் உரையாசிரியர்) - பாரி நிலையம், 90, பிராட்வே, சென்னை – 600 108 - பதிப்பு ஆண்டு-2000

[5.] ஐங்குறுநூறு - உ.வே. சாமிநாதையர் (பதிப்பாசிரியர்) - உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை- பதிப்பு ஆண்டு-1980

**ஆசிரியர் அறிவிப்பு — நலன் முரண்பாடு பற்றிய கூற்று**

இக்கட்டுரையின் ஆசிரியர், இவ்வாய்வுக் கட்டுரையின் எழுத்துப்பணி தொடர்பாக எவ்வித நிதிசார், தனிப்பட்ட அல்லது தொழில்முறை நலன் முரண்பாடும் இல்லை என உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறார். இக்கட்டுரையானது முற்றிலும் கல்விசார் மற்றும் ஆய்வு நோக்கத்திற்காக மட்டுமே தயாரிக்கப்பட்டுள்ளது; இதற்கு எவ்வித நிதி உதவியோ, நிறுவன ஆதரவோ பெறப்படவில்லை. இதில் பயன்படுத்தப்பட்டுள்ள அனைத்து மூலநூல் மேற்கோள்களும், இணையவழி ஆதாரங்களும் அறிவுசார் நேர்மையுடன், உரிய சான்றுடன் இணைக்கப்பட்டுள்ளன.